22.07.2025.

DVC.08/2024

தனலட்சுமி, க/பெ.இன்பசேகரன்

எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை.

நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரம் எனக்கு தெரியும். படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன் எனக்கு திருமணம் ஆகி எத்தனை ஆண்டுகள் ஆகிறது என்றால் 5 வருடம் ஆகிறது. எனது திருமணத்தில் போட்டோ மற்றும் வீடியோ எடுக்கப்பட்டது. அந்த போட்டோ மற்றும் வீடியோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் போட்டோ மட்டும் தாக்கல் செய்துள்ளேன். திருமணத்தின்போது எனக்கு எத்தனை சவரன் நகைகள் போட்டார்கள் என்றால் 31 சவரன் நகைகளும், எதிர்மனுதாரருக்கு 5 சவரன் நகைகளும் போட்டார்கள். அதற்கான ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அதுபோல் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஜீவனாம்ச மனுவில் (எம்.சி) திருமணத்திற்கு 20 சவரன் நகை போட்டதாக குறிப்பிட்டுவிட்டு இவ்வழக்கில் 31 சவரன் நகை என்று முன்னுக்கு பின் முரணாக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் முதலில் 20 பவுன் நகை செய்தார்கள். பிறகு எதிர்மனுதாரர் கேட்டதன்பேரில் 10 பவுன் செய்தார்கள். மேற்படி விஷயத்தை நான் எனது நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். திருமணத்திற்கு பிறகு நானும், 1ம் எதிர்மனுதாரரும் எத்தனை ஆண்டுகள் சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் ஒரு வருடம் 6 மாதம் சேர்ந்து வாழ்ந்தோம். நான் சொல்வது தவறு என்றாலும ் ஒரு மாதம் 1ம் எதிர்மனுதாரரோடு சேர்ந்து வாழ்ந்தேன் என்றால் சரியல்ல. நானும், 1ம் எதிர்மனுதாரரும் எங்கு சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் எதிர்மனுதாரர் வீட்டிலும் பிறகு எனது தாயார் வீட்டிலும் பிறகு தனிக்குடித்தனமாகவும் வாழ்ந்தோம். 1ம் எதிர்மனுதாரர் வீட்டில் எத்தனை நாட்கள் வாழ்ந்தோம் என்றால் சாட்சி முதலில் 2 மாதம் என்று சொல்லிவிட்டு பின்னர் 4 மாதம் என்று கூறினார். அங்கிருந்து ஏன் தனிக்குடித்தனம் சென்றோம் என்றால் மாமியார் மற்றும் மூத்தாரும் பிரச்சனை செய்ததால் தனிக்குடித்தனம் சென்றோம். நான் சொல்வது தவறு என்றாலும் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் அன்பாக பார்த்துக்கொண்டதாகவும், நான் தான் 1ம் எதிர்மனுதாரரோடு நல்ல மனைவியாக இல்லாமல் தனிக்குடித்தனம் செல்ல அழைத்து சென்றேன் என்றால் சரியல்ல. எங்களுக்கு குழந்தைகள் ஏதும் இல்லை.

அதற்காக மருத்துவ சிகிச்சை ஏதும் எடுத்துக்கொண்டோமா என்றால் 1ம் எதிர்மனுதாரர் சிகிச்சை எடுத்துக்கொண்டார். மேற்படி மருத்துவ சிகிச்சைக்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. ஆனால் என்னிடம் ஆவணம் உள்ளது. நான் சொன்னவாறு மருத்துவ சிகிச்சைக்கு சென்றிருந்தால் அதற்கான

மருத்துவ ஆய்வறிக்கையை நான் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. உத்திரமேரூரில் தனிக்குடித்தனமாக எத்தனை நாட்கள் வாழ்ந்தோம் என்றால் 8 மாதங்கள் சேர்ந்து வாழ்ந்தோம்.

நான் சொல்வதுபோல் 8 மாதங்கள் வாழவில்லை ஒரு மாதம்தான் வாழ்ந்தோம் என்றால் சரியல்ல. அந்த ஒரு மாதத்திலும் நான் 1ம் எதிரிமனுதாரருக்கு ஒரு மனைவியாக செய்யவேண்டிய கடமைகளை செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு அதனால் நான் 1ம் எதிர்மனுதாரரை அடித்ததால் அவருக்கு பல் விழுந்துவிட்டது என்றால் தவறு. எனது திருமணம் சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் ரிக்காடு கிளார்க்காக உத்திரமேரூர் வட்டார கல்வி அலுவலகத்தில் வேலை பார்த்து வந்தார். தற்போது எங்கு என்ன வேலை பார்க்கிறார் என்று எனக்கு தெரியாது. திருமணம் சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் மாதம் ரூ.38,000/-ம் சம்பளம் வாங்கினார் தற்போது மாத சம்பளம் எவ்வளவு என்று எனக்கு தெரியாது. சாட்சி மீண்டும் 1ம் எதிர்மனுதாரர் பள்ளியில் வேலை பார்ப்பதாக கூறினார். நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் 1ம் எதிர்மனுதாரர் மாத சம்பளமாக ரூ.88,000/- வாங்குவதாக குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. நான் 1ம் எதிர்மனுதாரரோடு உண்மையில் சேர்ந்து வாழவேண்டும் என்ற எண்ணம் இல்லையென்றாலும் அவர் அரசு ஊழியர் என்பதால் அவருடைய பணத்திற்காக மட்டுமே சேர்ந்து வாழ விரும்புவதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

திருமணத்திற்கு பிறகு 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் அன்பாக பார்த்துக்கொண்டதாகவும், எனக்கு சேர்ந்து வாழவேண்டும் என்ற எண்ணம் இருந்திருந்தால் 1ம் எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து சென்றிருக்கமாட்டேன் என்றால் சரியல்ல. நான் மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானது என்று சொன்னால் சரியல்ல.